[15th March 1966

சிதம்பரம் புகைவண்டி நிலையம்

* 288 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமண்யம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் ரயில்வே நிலையத்தை விரிவு படுத்த வேண்டுமென்று கோரி இம்மாநில அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. சீ. சிவசுப்ரமண்யம் : இனிமேல்தான் இதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : எனக்கு இருக்கிற தகவல்படி சமீபத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களிடத்திலே திட்டம் ஒன்றும் இல்லை. 1960-ம் வருஷம்தான் இந்த நிலையத்தை விஸ்தரிப்பதற்கு அல்லது அகலப்படுத்துவதற்காக ஏழு லட்சம் செலவு செய்தார்கள். ஆகவே, மீண்டும் உடனே செலவு செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

திருச்சிராப்பள்ளியில் வைத்தியக் கல்லூரி

* 289 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது திட்ட காலத்தில் திருச்சிராப்பள்ளியில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென சர்க்காரை திருச்சி வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் 1965-ம் வருடத்தில் கேட்டுக் கொண்டதா ?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இந்த விஷயத்தில் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. வை. சங்கரன் : இதில் எப்போது முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது சம்பந்தமாக பக்கத்தில் தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் அதை எடுத்துக் கொள்ளலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஆகையால் இதை ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.